செய்தி வெளியீடு எண்: 408 நாள்: 20.5.2010

ஆசிரியர் தேர்வு வாரியம்
கல்லூரிச் சாலை, சென்னை–600006

# செய்திக் குறிப்பு

## வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர் நேரடி நியமனம் 2009–10 போட்டி எழுத்துத் தேர்வு திருத்திய மதிப்பெண் பட்டியல் வெளியிடுதல்

2009–10 ஆண்டில் நிரப்பப்படவுள்ள 1064 வட்டார வளமைய பயிற்றுநர் பணியிடங்களுக்கு 14–02–2010ல் நடைபெற்ற போட்டி எழுத்துத் தேர்வில் கலந்து கொண்ட 125541 பணிநாடுநர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட நபர்களின் தற்காலிக பட்டியல் இவ்வாரிய இணையதளத்தில் 1–4–2010 அன்று வெளியிடப்பட்டது. பட்டியல் வெளியிடப்பட்ட பின்பு பல பணிநாடுநர்கள் தாங்கள் எதிர்பார்த்த மதிப்பெண்களைவிட குறைவான மதிப்பெண்கள் பெற்றுள்ளதாக இவ்வாரியத்திற்கு விண்ணப்பித்தனர்.

பணிநாடுநர்களின் கோரிக்கையின் அடிப்படையில் இவ்வாரியம் ஒவ்வொரு பாடத்திற்கும் திறமையும் மற்றும் தகுதியும் வாய்ந்த பேராசிரியர்கள் அடங்கிய குழுவினை விடை குறிப்புகள் குறித்து ஆய்வு செய்ய அமைத்தது. அக்குழுவினர் அளித்துள்ள அறிக்கையின் அடிப்படையில் தமிழ், கணிதம், இயற்பியல், வேதியியல், வரலாறு மற்றும் புவியியல் ஆகிய பாடங்களுக்கு திருத்திய மதிப்பெண்கள் வழங்கப்பட்டு அதனடிப்படையில் சான்றிதழ் சரிபார்த்தலுக்கான தற்காலிக தெரிவு செய்யப்பட்டோர் பட்டியல் இவ்வாரிய இணையதளத்தில் 18–05–2010 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மேற்காண் பாடங்கள் தவிர்த்து ஆங்கிலம், தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆகிய பாடங்கள் சார்பாக இவ்வாரியத்தால் 01–04–2010 அன்று வெயிடப்பட்ட பட்டியலில் மாற்றங்கள் ஏதுமில்லை.

தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ள நபர்களுக்கான சான்றிதழ் சரிபார்த்தலுக்கான அழைப்புக் கடிதம் இவ்வாரியத்தால் அனுப்பப்படும்.

பணிநாடுநர்கள் தங்கள் திருத்திய மதிப்பெண்களை இவ்வாரிய இணையதளம் http://trb.tn.nic.in மூலம் அறிந்துகொள்ளலாம்.

தலைவர் 19/5/2010

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.